Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்

CC. No. 418/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் எ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ .சா. | - | 1 | தொழில் | - | சிவில் பொறியாளர் |
| பெயர். | - | செல்வம் (எ) மனோஜ்குமார் | வட்டம் | - | சென்னை |
| த/பெ. | | செல்லப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | சென்னை | வயது | - | 36 |

12.03.2026

**முதல் விசாரணை.**

1. ஐயப்பன் என்பவர் என் மீது செக் கேஸ் போட்டுள்ளார். 2018-2019 ல் சென்னையில் அமேசான் நிறுவனத்தில் வியாசர்பாடியில் டீம் லீடராக வேலை செய்தேன். அப்போது ஐயப்பன் வந்து சேல்ஸ் டெலிவரி டிபார்ட்மெண்டில் வேலை வேண்டும் என்று கேட்டார். நானும் வேலை போட்டு கொடுத்தேன்.

2. அவர் டெலிவரி சரியாக செய்யவில்லை, ரெஸ்பான்ஸ் இல்லை என்று வாடிக்கையாளரிடமிருந்து நிறைய கம்பளைண்ட் வந்தது. அதனால் அவருக்கு பார்சளெல்லாம் கம்மியாக கொடுக்க ஆரம்பித்தேன். டெலிவரி செய்ய வண்டி வேண்டும் என்று சொன்னாங்க அவருடைய வண்டியை மாடிபை பண்ண 80 ஆயிரம் செலவாச்சு என்று சொல்லி அடிக்கடி என்னிடம் கேட்டு சண்டை போட்டார்.

3. எனக்கு அதிகமாக பேக்கேஜ் கொடுங்க அப்ப தான் எனக்கு கட்டுபடி ஆகும் என்று சொன்னார். அதற்கு 60 பேருக்கு மேல வேலை செய்யிறாங்க எல்லாருக்கும் பிரிச்சு தான் கொடுக்க முடியும் என்று சொன்னேன். அதை பலமுறை சொல்லியும் சின்ன வாக்குவாதமாக ஏற்பட்டது.

4. அதை காரணமாக வைத்து எனது பைக்கில்இருந்த செக் புக்கை மொத்தமாக அவர் எடுத்துவிட்டார். அதில் இரண்டு செக் லீபில் எம்டி சைன் மட்டும் போட்டு வைத்திருந்தேன். அவர் இரண்டு மாதம் தான் என்னிடம் வேலை செய்தார். அந்த இரண்டு மாதத்திற்கான சேசரியும் (ஜனவரி, பிப்ரவரி) மாதத்திற்கு என்னுடைய வங்கி கணக்கிலிருந்து அவருக்கு அனுப்பியுள்ளேன்.

5. எனது வண்டி டேங்க் கவரிலிருந்த செக் காணாமல் போனது எனக்கு தெரியவில்லை. ஒரு வாட்டி வங்கியிலிருந்து மெசேஜ் வந்தது. மெசேஜ் வந்த பிறகு பேங்க் போய் பார்த்தேன். அவங்க ஐயப்பன் பேரில் இரண்டு செக் போட்டிருக்காங்க, அதில் ஒரு செக் பவுன்ஸ் ஆகிவிட்டது, இன்னொரு செக் வந்துள்ளது என்றவுடன் நான் பேங்க் மேனஜரிடம் கம்பளைண்ட் செய்தேன். அவர் செக்புக்கை மொத்தமாக கேன்சல் செய்துவிட்டு, ஒரு செக்கை ஸ்டாப் பேமண்ட் போட்டுவிட்டார்.

6. அதன் பிறகு ஐயப்பனுக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. அவர் 2019 பிப்ரவரியில் நான் அரசூருக்கு வந்து அவரிடம் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளார், நான் அரசூருக்கே வந்தது இல்லை. பணமும் நான் அவரிடம் வாங்கவில்லை. அந்த அளவு பணம் கொடுக்க அவருக்கு அந்த அளவிற்கு வசதியும் இல்லை. அவர் என்னுடைய பிள்ளையின் ஆப்ரேசனுக்கு பணம் வாங்கியதாக சொல்கிறார். இதுவரை என் பிள்ளைக்கு எந்த ஆப்ரேசனும் செய்யவில்லை.

7. நான் கொடுத்ததாக அவர் சொன்ன செக்கை பாண்டிச்சேரியில் பேங்க் ஆப் பரோடாவில் போட்டதை மறைத்துவிட்டு அரசூர் பிரான்சில் போட்டதாக சொல்லி வழக்கு போட்டுள்ளார். பாண்டிச்சேரி பேங்க் ஆப் பரோடாவில் போட்ட தேதிக்கும், அரசூர் பிரான்சில் போட்ட தேதிக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. காலதாமதமாக தான் வழக்கு போட்டுள்ளார். முன்னாடியே போட்டிருந்தால் எனக்கு என்ன விவரம் என்று எனக்கு தெரிந்திருக்கும். காலதாமதமாக போட்டதால் என்ன என்று எனக்கு தெரியவில்லை. இதுவரை நான் அவரிடம் ஒரு பைசா கூட பணம் வாங்கவில்லை. என்னிடம் வேலை செய்த இரண்டு மாதத்திற்கும் சம்பளம் கொடுத்து தான் ரிலீவ் பண்ணினேன்.

8. அவர் வண்டிக்கு செலவு பண்ணியதில் லாஸ் ஆகிவிட்டது என்பதற்காகஅந்த காழ்புணர்ச்சியில் இதை செய்துள்ளார். செக்கை சென்னை வியாசர்பாடி அமேசான் உறப்பிலிருந்து திருடிச்சென்றுள்ளார். அதன்பிறகு அவர் என்ன செய்தார் என்று தெரியவில்லை. இந்த வழக்கிற்கும், எனக்கு எந்த சம்மந்தமும் இல்லை, பொய்யான வழக்கு

போட்டுள்ளார். **ஆக்ஸிஸ் வங்கியின் 01.01.2019 முதல் 31.12.2019 வரையிலான காலகட்டத்திற்கான வி.செல்வம் என்பவரின் ஸ்டேமண்ட் ஆப் அக்கவுண்ட் விவரங்கள் எ.சா.ஆ.1 ஆகும்**.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.